**பள்ளேபொல பிரதேச சபை**

**மாத்தளை மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

-------------------------------

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 07 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 21 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 06 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

---------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பள்ளேபொல பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய ரூபா 1,163,313 தொகைக்காக ரூபா 3,000,000 கடன்கொடுத்தோர் மீதியொன்று ஏற்படுத்தப்பட்டமையால் ஆண்டின் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் மீதி என்பன ரூபா 1,836,687 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) உடைத்து அகற்றப்பட்ட ரூபா 143,800 கூட்டுத்தொகையான 03 கட்டிடங்களின் கிரயத்தை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால்

அந்தக் கணக்கு மீதிகள் சமமான பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய நிர்மாணச் செலவினம் ரூபா 1,847,474 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மத்திய மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 93,592 பெறுமதியான கணனி இயந்திரத்தினதும், மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைத்த டிபர் வாகனத்தினதும் 04 சக்கர உழவு இயந்திரத்தினதும் பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) சபைக் கட்டிடத்தையும் சபையின் கூட்ட மண்டபத்தையும் நிர்மாணிப்பதற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 568,905 தொகை குறைவாகவும், சபையின் கூட்ட மண்டபத்தை மெருகூட்டும் வேலையின் II ஆவது கட்டத்திற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 118,276 தொகை அதிகரித்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 138,392 பெறுமதியான 125 கல்வனைஸ் குழாய்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 34,300,489 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 1,397,704 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கிடைக்க வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 06 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,909,888 ஆக இருந்ததுடன் 03 வருட காலத்தை விஞ்சிய ரூபா 203,056 கூட்டுத்தொகையான 03 மீதிகள் அதில் உள்ளடங்கியுள்ளது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 08 கடன்கொடுத்தோர் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 26,448,375 ஆக இருந்ததுடன் 03 வருட காலத்தை விஞ்சிய ரூபா 1,349,154 கூட்டுத்தொகையான 03 மீதிகளும் அதில் உள்ளடங்கி உள்ளது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 1,655,246 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

-----------------------------

### 2.1 நிதி விளைவு

----------------------------------

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,310,597 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,981,960 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 1,328,637 அதிகரிப்பைக் காண்பித்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

----------------------------------------

### 2.2.1 ஏக்கர் வரி

-------------------------

நிலுவையாக இருந்த ஏக்கர் வரி மீதி ரூபா 107,473 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் ஒரு வருடகாலத்தை விஞ்சிய ரூபா 101,233 மீதியும் உள்ளடங்கி இருந்தது.

### 2.2.2 ஆதனவரி

---------------------

நிலுவை ஆதனவரி மீதி ரூபா 159,051 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் ஒரு வருட காலத்தை விஞ்சிய ரூபா 119,547 மீதியும் உள்ளடங்கி இருந்தது.

### 2.2.3 கழிவுப்பொருள் கட்டணம்

-----------------------------------------

நிலுவையாக இருந்த கழிவு் பொருள் கட்டண மீதி ரூபா 72,562 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் ஒரு வருட காலத்தை விஞ்சிய ரூபா 62,922 மீதியும் உள்ளடங்கியிருந்தது.

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 316,111 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 3,945,707 தொகையும் அறவிடவேண்டியிருந்தன. 1992 - 2010 வரையான காலப்பகுதிக்குரிய கிடைக்க வேண்டிய ரூபா 825,857 தொகையான முத்திரைக் கட்டணம் மற்றும் 2011 ஆம் ஆண்டிற்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 29,100 தொகையான நீதிமன்றத் தண்டப்பண வருமானம் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

### 2.2.5 சுற்றாடல் அனுமதிப்பத்திரம்

-------------------------------------------

சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 13 வியாபார முயற்சிகளுக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்காமையால் சபை ரூபா 57,200 வருமானத்தை இழந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

சபையின் சம்பளம் மற்றும் வேதனங்களின் செலவினம் ரூபா 14,779,482 ஆக இருந்த போதிலும், ரூபா 10,024,976 தொகை மாத்திரம் மாகாண சபையிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டமையால் ரூபா 4,754,506 தொகையை சபை நிதியத்திலிருந்து செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

நீண்ட காலமாக கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டிருக்கின்ற ரூபா 151,274 கூட்டுத்தொகையான வேலைக் கடன்பட்டோர் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் கட்டிடத் திட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற்காக மீளாய்வாண்டிலும் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் கிடைக்கப் பெற்ற 162 கட்டிட விண்ணப்பங்களில் 116 விண்ணப்பங்களுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் இணக்கச் சான்றிதழ் அதில் 02 விண்ணப்பங்களுக்காக மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தன.

(ஆ) வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அனுமதிப்பத்திர பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட வியாபாரங்களின் எண்ணிக்கைக்காக மாத்திரம் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(இ) 1987 ஆம் ஆண்டின் பின்னர் காணி, கட்டிடங்கள் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

------------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான அம்பொக்க நீர் உத்தேசத்திட்டத்தில் நுகரப்பட்ட அலகுகளின் எண்ணிக்கைக்கு இணங்கும் வகையில் நீர்க்கட்டணத்தை அறவிடும் வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படாது ரூபா 200 தொகையான நிலையான மாதாந்தக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) சபை அலுவலக வளவு அமைந்துள்ள காணியின் உரித்து சட்டரீதியாக கையேற்கப்படாமையின் காரணமாக, தொடுக்கப்பட்ட வழக்கிற்காக 2001 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் வழக்குக் கட்டணத்திற்காக ரூபா 117,500 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

**3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

------------------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19(i)(i) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது 24 ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தி மீளாய்வாண்டின்போது ரூபா 3,128,326 தொகை சம்பளம் மற்றும் படிகளாக சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

**3.6 இனங்காணப்பட்ட நட்டம்**

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் ரூபா 58,500 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட கைவிரல் அடையாள இயந்திரம் செயலிழந்திருந்த போதிலும் அதனைப் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காது பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட கல்வனைஸ் குழாய்களில் ரூபா 56,464 பெறுமதியான 51 குழாய் அலகுகள் பற்றாக்குறையாக இருந்தன.

(இ) மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட நீர் உத்தேசத்திட்டத்திலிருந்து ரூபா 72,255 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 3.7 விளைவற்ற/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ரூபா 884,400 கிரயமான 02 வாகனங்கள் 05 வருடங்கள் அளவிலான காலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் ரூபா 14,300 கிரயமான சனசமூகக் கட்டிடம் மற்றும் ரூபா 65,000 தொகையான நீர்க் களஞ்சியத் தாங்கியொன்று என்பன பயன்பாட்டிற்கு எடுக்காமையினால் பயன்பாட்டின்றிக் காணப்பட்டன.

### 3.8 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

முறையான கழிவுகளை அகற்றும் முறைமையொன்று சபையிடம் காணப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக சட்டரீதியான காணியொன்று கையேற்கப்பட்டிருக்கவில்லை. நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள், மொறகஸ்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள காணியில் குழிகள் வெட்டி அகற்றப்பட்டு, அவற்றை மண்ணால் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் 5(7) ஆம் விதியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு முறைமையொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு தாபிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குழுவை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) 11 வருமான விடயங்களின் மதிப்பிடப்பட்ட வருமானங்களுக்கும் உள்ளபடியான வருமானங்களுக்கும் இடையே 13 சதவீதம் முதல் 67 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(ஆ) 14 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 490,000 தொகையான மொத்த நிதி ஏற்படும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 25 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 02 சதவீதம் முதல் 67 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(இ) மீளாய்வாண்டில் பாதீடு திருத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டதன் பின்னர் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஊ) வாகனக் கட்டுப்பாடு
(எ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்